RBN9/567/64
Registered as a Newspaper in Ceylon

உ
சிவமயம்

விலை சதம்-15

வருட சந்தா
இலங்கை இந்தியா - 5-00
சந்தா ஏஜன்ஸ்,
சம்பு இன்டஸ்றீஸ்
அரசிப்பாளையம், சேலம்-6
குடாநாட்டு வர்த்தக மாளிகை
பிரதான வீதி, சுன்னாகம்.
[இலங்கை]

LUXMI VILAS PRESS
83c, Victoria Street,
Durban, S. Africa

KALAIMAGAL
BOOK DEPOT
P. O. Box 1326,
Singapore.

# நாவலன்

சைவ காவலன்
மாதம் இருமுறை வெளிவரும் சைவ வெளியீடு

மலர் 8 | ஸ்ரீலங்கா சைவாதீனம் — இளவாலை — 15-8-69 சௌமிய ஆடி - 31 | இதழ் - 3

## குன்றக்குடி அடிகளாரின் அரசியல் பதவி

தவத்திரு குன்றக்குடிஅடிகளார் 'செனேற்றர்' பதவி எய்தினர் என்றசெய்தி ஊர்ஜிதமாயிற்று. அடிகள் பெறும் பேறு செனேற்றர்ப் பேறு? என்று ஆரும் சந்தேகிப்பதில் தவறில்லை. எனினும் சைவ சமய ஏற்றங்கருதி அவர்கள் அப்பதவியை ஏற்றுள்ளார் எனில் அது ஒப்பவேண்டுவதே. ஆனால் அடிகள் கிலவருடங்களாகச் சொல்வன செய்வன எதுவும் சைவசமய ஏற்றங் கருதியவையாய் இருக்கவில்லையே என்பது கவலைக்குரியதாகும், அடிகள் பேசுகிறார் என்று அன்பர்கள் அணுகினால் அங்கே கேட்பன அத்தனையும் அரசியற் கருத்துக்கள். 'அரசியலும் பொருளியலும்', 'அப்பர் சுவாமிகளும் பொருளியலும்', வேதமுறை வழிபாடு சைவமம்ல. தமிழிலேயே பூசைசெய்யவேண்டும்'' என்றிருக்கும் — அவர் எடுத்துரைக்கும் பொருளுரைகள். அரசியலும் பொருளியலும்பேச உள்ளவர் யார்? அடிகள் பேசஉள்ளது எது? வேதத்தியானங்களும் மந்திரங்களும் சைவத்துக்கு அந்நியமாவது எங்ஙனம்? என்று எண்ணும்போது ஏமாற்றமே விளைகின்றது. இந்த அடிகள் அவர்கள் பெரும்பாலும் அரசியல் வேட்கையுள்ள இளைஞர் மத்தியில் காணும் சந்தர்ப்பங்கள் அதிகமிருந்தன. இது இங்ஙனமாதலின் இவ்வடிகளின் இப்பதவியேற்பானது மும்மையாலுலகாண்ட மூர்த்திநாயனார், மெய்ப்பொருள் நாயனார் செயல்போல சமயத்தின் மகிமையால் அரசியலை வளம்படுத்துவதாக ஒருபோதும் அமையாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால், அதற்கு நேரெதிராக, அரசியல் அதிகாரபலத்தால் தமது புரட்சிக் கருத்துக்களுக்கு வலுவூட்டி அவ்வகையிற் சமயத்தைத் தலைமுழுகவைத்துவிடவும் கூடுமென்று யாரும் அஞ்சுவதில் அர்த்தமில்லாதிருக்கமுடியாது. எனவே, அடிகள் சுவதர்மத்தைக் கைநெகிழ்ந்து பரதர்மத்திற் பிரவேசிக்கின்றார் என்பதே முடிவாகின்றது இந்நிலையில், பின்வரும் பகவத்கீதை மந்திரத்தை அடிகள் கவனத்துக்கு அர்ப்பணித்து அமைதிகாண்போமாக.

''சிரேயாஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் சு அநுஷ்டிதாத் 4ஆம் அத். 35ஆம் சுலோ.

நல்லமுறையில் அநுஷ்டிக்கப்படும் பரதர்மத்திலும் பார்க்க, தரக்குறைவாக அனுஷ்டிக்கப்பட்ட சுவதர்மம் ஒருவனுக்கு மேலானதாகும்.

## வருண ஆச்சிரம தர்மம்

### பகவத் கீதை — ஆச்சிரம தர்மம்

— ச. பொன்னுத்துரை —
வண்ணை - மேற்கு

18ம் அத்தியாயம்

இப்பகுதியிலுள்ள சுலோகங்களின் பொருள் வருமாறு:

சுலோ. 41.

பரந்தப, பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர். இவர்களுடைய தொழில்கள், அவரவரியல்பில் விளையும் குணங்களின்படி வகுக்கப்பெற்றனவாம்.

சுலோ. 42.

அகக்கரணத்தையடக்குதல், புறக்கரணத்தையடக்குதல், தவம், தூய்மை, பொறுமை. நேர்மை, ஞானம், கல்வி, ஆஸ்திகம் இவை இயல்பிலே தோன்றும் பிராமண கர்மங்களாம்.

சுலோ. 43

சூரத்தன்மை, ஒளி, உறுதி, திறமை, போரிற் புறங்காட்டாமை, ஈகை, இறைமை, இவை இயற்கையிலே தோன்றும் க்ஷத்திரிய தர்மங்களாம்.

சுலோ 44

உழவு பசுக்காத்தல், வாணிகம்கைத்தொழில் இவை இயற்கையிலேபிறக்கும்வைசிய தர்மங்களாம் தொண்டுபுரிதல் சூத்திரனுக்கு அவன் இயற்கையால் ஏற்பட்ட கர்மமாம்.

சுலோ 45

தனக்குத் தனக்குரிய கர்மத்தில் மகிழ்ச்சியும் மனிதன் ஈடேற்றம் பெறுகிறான். தனக்குரிய தொழிலில் இன்புறுவோன். எங்ஙனம் சித்தியடைகிறான் என்பதைச் சொல்லுகின்றேன். கேள்.

சுலோ 46

உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாய், இவ்வையகம், அனைத்தும் நிறைந்திருக்கும் கடவுளைத் தனக்குரிய கர்மத்தால் பூசை செய்யும் மனிதன் ஈடேறுகிறான்.

—தொடரும்

## பாடசாலைகளிற் சைவக் கல்வி

— ஆசிரியர் திலகம் திரு. ஆ. கணபதிப்பிள்ளை —

### 3. சைவங் கற்பிக்கும் ஆசிரியர் தகைமைகள் . முற்றொடர்

ஆசிரியர் எனினும், யாவரும் சைவபாடத்தை நன்கு கற்பிக்க முடியாது. இந்நிலைமையைப் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டுச் சென்ற எட்டு வருடங்களிலும் சைவப்பற்றுடையார் அவதானித்திருப்பர். சைவபாட ஆசிரியர் எனப்படுபவர் தமக்கொரு சற்குரு வாய்க்கும் புண்ணியப் பேறுடையராய், கருவி நூல்களாம் இலக்கண இலக்கிய நூல்களில் கணிசமான அளவு பாண்டித்தியம் உடையராய், பன்னிரு திருமுறைகள் புராணங்கள் சித்தாந்த சாத்திரங்களை ஓரளவாவது ஐயந்திரிபறக் குருசீடமுறையிற் பயின்றவராய், தாமே சந்தேகத்துக் கிடமின்றிச் சைவநெறி நிற்பவராயிருத்தல் இன்றியமையாதது. சைவ ஒழுக்கநெறி நிற்றல் என்பதால் ஊனுணவு முதலிய பஞ்சமாபாதகங்களிலிருந்து தவிர்தல், நித்திய தர்ம அனுட்டானத்தில் தவறாமை என்பன மிகக்கண்டிப்பானவை ஆகின்றன. இக் கருத்துகள் நாவலரையா அவர்களால் மிகவும் வற்புறுத்தப் பட்டவைகள். இதுபோன்ற பல சைவகைங்கரியங்கள் செய்த நன்றிக் கடனாகவே அவர்க்கு இன்று சிலையெடுத்ததும் ஊரறியத் தெசமறியப் பாராட்டுவிழாக்கள் நடத்தப் பட்டதுமாகும். யாம் குறிப்பிட்ட சைவானுட்டான வாழ்வு சைவத்தின் உயிர்நாடியாயிருப்பவும், இன்று சைவம் பேசியும் சீர்திருத்தம் செய்வதாய்க் காட்டியும் முன்னணியில் நிற்கும் பலரிடத்தில் அது காணப்படாதிருப்பது மிகுந்த கவலைதருவதும் சைவத்தை வேரறுப்பதும் தாமும் பிறரும் நிரயத்தழுந்தற்கேதுவாகியதோர் மாபாதகமுமாகும்.

பஞ்சமாபாதகங்கள் சைவத்தில் விலக்கப்பட்டவை. விலக்காத ஆசிரியரிடத்துத் திருவருள் பதியுமாறில்லை. திருவருள் இல்லையெனில் சைவ சாஸ்திர உண்மைப் பொருள் புலப்படாது. பின் எதைப்படிப்பிப்பது? வீண் வம்பளப்பே முடிவு எனலாம்.

—தொடரும்

## அகில இலங்கைச் சிவப் பிராமண - சுன்னாகம் கிளை -

சங்கம் கடந்த ஆவணிமீ ஆரும்திகதி தன் வருடாந்தக் கூட்டத்தை, சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலையில், நடாத்தியது. விசேட பேச்சாளராக சிவஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் அழைக்கப்பட்டிருந்தார். அவர் தமது உரையில், 'எமது குருகுலம் கீழ்நிலை அடைவதற்கு ஒழுக்கம்; கடவுள் பக்தி என்பன குன்றி இருப்பதே காரணம். ஆதலினால் இளம்பருவம்தொட்டே நல்ல பழக்க ஒழுக்கங்களையும், குருபக்தி, இறைபக்தி என்பவற்றையும் நிறையப் பெற்றுவிடவேண்டும்' என்றார்- கீழ்க்காண்போர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் சிவஸ்ரீ சு, சர்வேஸ்வரக்குருக்கள், செயலாளர் சி. வெங்கடேஸ்வர சர்மா, பொருளாளர் ச. சோமாஸ்கந்தக்குருக்கள்.

உ

## ஆசி

செந்தமிழும் மேலாஞ் சிவநெறியும் செம்மைபெற
வந்தருளும் நாவலனின் வாய்மைவழி—தந்தொளிரும்
காவலன்போல் வேதநெறி காக்கும் கலைக்கதிராய்
நாவலனும் வாழியவே நன்கு.

— மகாவித்துவான் க. வேந்தனார்


# நாவலன்

மாதம் இருமுறை வெளிவரும் சைவக்காவலன்

மலர் 8] ஸ்ரீலங்கா சைவாதீனம் - இளவாலை — 15-8-69 இதழ்-3


## ஏலாவிட்டால் அங்கென்னவேலை?

மாறுபட்ட இரண்டு பொருள்கள் தம்முள் ஒன்றோடொன்று முரணி வலியிழந்து கெட்டொழிதலை அறிஞர்கள் '' சுந்தோப சுந்த நியாயம்'' எனக்குறிப்பிடுவர். 'திலோத்தமை' போலவந்த மந்திரிப் பதவி பிரித்து வைத்தது. சுந்தனும் உபசுந்தனும் பிரிந்தது போல் ஜீ. ஜீ. யும் செல்வாவும் பிரிந்தார்கள். இதே சூழ்நிலையில், தத்தளித்த தமிழ்த் தாயின் சேலையை உரிகின்றனர் சிங்களர். இக்கருத்தை 'தந்தோள்வலி' என்ற தொடரில் கம்பரும் ''முராரியை முராரி'' என்ற தொடரில் வில்லிபுத்தூரும் கூறியதை அறியாரேனும் (Get up and bar the door) 'எழும்பித் தாழைப்போடு' என்றசபதம் செய்து கொண்ட கணவன் மனைவியின் முடிவை இரு Q. C. களும் அறியாதிருக்க மாட்டார்கள். சமஷ்டிக்கும், சம அந்தஸ்திற்கும் வித்தியாசமில்லை என்ற விஷமிகள் பாமரரை அனுப்பிய பிரமகத்தி தோடத்திற்கு இம்முறை ஆளாவார்கள். அடுத்த தேர்தலில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிமும்; உடுவிலில் ஒரு பெண்ணும்; கோப்பாயில் பாதிரியும் மன்னாரில் கத்தோலிக்கரும் ஏனைய வடமாகாணத் தொகுதிகளில் சைவ அபிமானிகளும் நிறுத்தப்பட வேண்டுமென்ற யோசனையைப் பலர் கூறிவருகிறார்கள். ஆனால் தமிழ் அரசுக்கட்சி அங்கத்தவர்கள் அதே ஸ்தானங்களில் போட்டியிடுவார்கள் என்ற வதந்தி பொய்யாக மாட்டாது. கோப்பாய் நல்லூர் கிளிநொச்சிக்கு வரவிருந்த புதிய அங்கத்தவர்களை ஆசைவார்த்தை பேசிப் பிறகட்சிகளுடன் சேராது தமிழ் அரசார் பாதுகாத்துள்ளனர் என்றும் அறியக் கிடக்கின்றது. நல்லூர் கடைசித் தமிழ் அரசனின் இராசதானியாகையால் ஜீ. ஜீ. நல்லூரில் போட்டியிடுவார் என்று மறைமுகமாக ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் விஷமிகள் எவரையும் பாராளுமன்றத்திற்கு அனுப்பக்கூடாதென்றே கூறுகிறார்கள், உணர்ந்தவர்கள். இம்முறை இவர்களுக்குத் துறவு கொடுத்தல் பொதுமக்களின் கையிலே உள்ளது. தமிழ் காங்கிரஸ் ஒருபோது இடதுசாரியாயிருக்க மாட்டாதாயின் சமூக ஏற்றத்தாழ்வுச் சட்டத்தில் சமயத்தைப் பாதுகாக்கும் திருத்தத்தை இன்னும் ஏன் கொண்டுவரவில்லை. செய்தால் அசுவமேத யாகஞ்செய்த முதல் புண்ணியத்தையடைவர். ஏலாவிட்டால் அங்கென்னவேலை?

மாதம் ரூபா 700/- அரசாங்கச் செலவில் பிரயாணம், தபால் தந்திச் செலவு இருக்கும்போது ஆடம்பரச் செலவிற்கும் செல்வாக்கிற்கும் வழக்குகள் குவியும்போது அச்சம்தான் எதற்கு? 'பிளேற்றோ' கூறியது போல் தத்துவ ஞானிகளைப் பிரதிநிதிகளாக அனுப்பினாலொழிய மக்களுக்கு நன்மை வராது அச்சுவேலிக் குமாரசுவாமிக் குருக்களும் மாவிட்டபுரம் பாலசுந்தரகுருக்களும் போகக் கூடாதென்று தடுத்தால் போகலாம் என்று சொல்லக்கூடிய குரு யார்? இராணிகூட குருவினுடைய ஆணைக்குக் கட்டுப்பட்ட சம்பிரதாயம் உலகிலுள்ளது அப்படியிருக்க, நம்மிற்கடைப்பட்ட நாதர்கள்—சிவசமயத்தை வணங்காது விஷ்ணு முதலிய எண்ணில்லாத சீவர்களை வணங்குபவர்கள். சொல்லே பெரிதாம். தன்னுடைய தாயை தாடகை என்றவன் தன்னை அவள் மகன் என்று கூற என்ன உரிமை உண்டு. குருக்கள்மாரின் சொல்லைத் தட்டிய பின் தம்மைச் சைவர்கள் என்று சொல்ல என்ன துணிவு உண்டு. குருக்கள்மாரின் ஒற்றுமையீனமும் இதற்குதவுகின்றது. ஆலயப் பிரவேசஞ் செய்யப்பட்ட கோவில்களில் பூசை செய்யும் குருமார்கள் எம்மையும் பஞ்சமரையும் கலக்கவிட்டுத் தாம் தப்பித்துக் கொண்டோம் என்று நினைக்கிறார்கள். சுந்தரர் அப்பீல் தோற்றால் ஆதிமூலமும் வருவோம் என்பதை மறந்து போகக்கூடாது. மிகவும்ஆசாரமுள்ள வைசியர் இருக்கின்றோம் நாம்.

நல்லூரின் கதவு திறந்துவிட்டவர் கதியும் முன் நின்று நடப்பித்தவர் கதியும் யாம் அறிந்தனவே இவை மட்டுமல்ல சட்டத்தை பிரேரித்தவரும் அனுமதித்தவரும், நயினையிலும் கோணேஸ்வரத்திலும் ஆலயப் பிரவேசஞ் செய்வித்தவருமான நாலு அங்கத்தவர் எங்கே? இவை மட்டுமல்ல இந்துமா மன்றப் பெருந்தலைவரவர்கள் கதி என்ன? அளவெட்டி கும்பளாவளையில் பஞ்சமரைத் தடுப்பவர் யார்? என்று மார்புதட்டிய வியாபாரி அன்றுமுதல் திருஉலா முடியுமட்டும் ஆஸ்பத்திரியால் வராமை எதனால்? நயினையின் முதன் முதற் சமபோசனஞ்செய்த அன்னதான மடம் தீக்கிரை யானதேன்? பன்றித் தலைச்சியில் நாகம் தோன்றியது மாவிட்டபுரத்தில் சுந்தரரை வருவித்தது எல்லாம் ஏன்? இவையெல்லாம் வேதசிவாகமங்களின் உண்மைகளை விளக்குகின்றன. இதை உணராதவருககு அங்கென்ன வேலை?

சேர். இராமநாதன் சிங்களவர் சார்பில் வாதாடியதால் இஸ்லாமியர் தமிழரை நம்புகிறார்களில்லை என்று தமிழ் அரசார் விஷக்கிருமியைப் பரப்பியிருக்கின்றனர். ஆயிரம் இராமரும் ஒப்பரோ, எனப்பட்ட பரதன்போல், அன்புகொண்ட இராமநாதனை இஸ்லாமியர் அறிவர். இன்று போய் நாளைவா என்று நீதியுடைய இராமன் நாமமுடைய அவன் அன்றைய கொலையை நிறுத்தச் சென்றானே அன்றி எவரொருவர் சார்பிலுஞ் சென்றானல்லன். அவரின் தகப்பனாரின் பெயரிலுள்ள பொன்னம்பலவாணர் கோயிலைப் பார்த்தால் சிவதொண்டின் சொரூபம் தெரியும். வேதசிவாகம முறைப்படி பிறரின் பணத்தையோ உபயத்தையோ எதிர்பாராது ஆறுகாலப் பூசையும் காலம் தப்பாத பெருவிழாக்களும் நடைபெறுகின்றன. அதற்குச் சமீபத்திலுள்ளஇறைச்சி, கள்ளுக் கடைகளை அகற்றிவிடக்கூடிய தரும எண்ணமில்லாத பிரதிநிதிகளே! ஏலாவிட்டால் அங்கென்னவேலை?

தனிச் சிங்களச் சட்டம் ''களனியில்'' பிரேரிக்கப்படும்போது வெளியேறி ஓடினார் மகாதேவாவிடம், டட்லியிடம் இராஜினாமாச் செய்தார். மறுநாள் அழுதார்; அன்னையும் அழுதாள். கலாநிதி சு. நடேசபிள்ளை சைவச் சர்வகலாசாலையை ஏற்படுத்த மேல்சபை அங்கத்தவர் பதவி ஏற்றார். மறுமுறையும் நம்பி மோசம் போனார். நாவலர் சிலையும் இராமநாதன் சர்வகலாசாலையும் தமிழ் அரசார் செயல்படவிடார்கள் என்று கூறினார். அவருடைய மாணவன் ஸ்ரீகாந்தாவும் பிறரும் சிலையைக் கொணர்ந்தார்கள், சர்வகலாசாலை பின் வரும் என்று அவரும் நினைக்கின்றார், நானும் நினைக்கின்றேன்.

பல்சான் றீரே !
பல்சான் றீரே !
நல்லது செய்தல்
ஆற்றீராயினும்
அல்லது செய்தல்
ஓம்புமின். (புறம்)

## எதிர்க்கின்றோம். ஆம்! ஏன் எதிர்க்கின்றோம்?

இன்றைய ஆலயப்பிரவேசக் கோரிக்கையானது :—

(1) சைவசமய ஆதார சுருதிகளாகிய வேதாகம விதிகளுக்கு மாறுபாடானது. அதனால் எதிர்க்கின்றோம்.

(2) சைவசமய சித்தாந்த உண்மை நெறிக்கு நேர் விரோதமானது. அதனால் எதிர்க்கின்றோம்.

(3) சிவாலயத்தினதும் அதன் வழிபாட்டு முறையினதும் பாரம்பரியத்தைப் பரிகசிப்பது. அதனால் எதிர்க்கின்றோம்.

(4) ஆலய உள் வீதி சுவாமி காரியத்துக்கும் சுவாமி காரியத்தில் நேரடியாக ஈடுபடுதற்கேற்ற குலப்பிறப்பாசாரம் வாய்ந்தவர்களுக்கும் மட்டுமே உரியது என்ற நிலைமையைத் தகர்த்தெறியப் பார்க்கின்றது. அதனால் எதிர்க்கின்றோம்.

(5) வெறுங் குளிப்பும் வெள்ளை வேட்டியுமே சைவாசாரம் என்ற தவறான அபிப்பிராயத்தை வலியுறுத்துகின்றது. அதனால்எதிர்க்கின்றோம்.

(6) எந்த ஒரு விஷயத்திலும் தகுதி வேறுபாடும் படிமுறை ஏற்றமும் பிரதானமாகக் கவனிக்கப்படுபவை என்ற பொது உண்மையைப் போலியாக்குகின்றது. அதனால் எதிர்க்கின்றோம்.

(7) வெளியில் நின்று புரியும் வழிபாடு திருப்தியற்றது என்ற தப்பெண்ணத்திற்கு உத்தரவாதமளிக்கின்றது. அதனால் எதிர்க்கின்றோம்.

(8) இலங்கை அரசியல் அமைப்புத்திட்ட சட்டத்தில் சமயங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு விதிக்கு முரண்பாடான சட்டத்தால் பாரம்பரிய சைவக் கொள்கைகளையும் தேசவழமையையும் பாதிக்க நிற்கின்றது. அதனால் எதிர்க்கின்றோம்.

(9) சைவத் தலைவர்கள் அல்லாதவர்களின் கேள்விப்படி, சைவ அரசாங்கமல்லாத ஒரு அரசாங்கம் சைவசமயக் கொள்கைகளைப் பாதிக்கும் வகையிற் கொண்டுவந்த ஒரு சட்டத்தைச் சைவமக்கள் ஏற்றுக் கொள்ள வேணுமென்று (இது) நிர்ப்பந்திக்கின்றது. அதற்கிடங்கொடுப்பது சைவதர்மமல்ல. அதனால் எதிர்க்கின்றோம்.

(தொடரும்)

இவற்றுக்கு விரிவும் விளக்கமும் வேண்டப்படில் இப்பத்திரிகை மூலம் அவை வெளியிடப்படும்.

அ. இ. சை. அ. பா. சபை.

# ஆலயந் தொழுவது சாலவும் நன்று

— கா. நமசிவாயம் - சைவப் புலவர் —

உலகியல் ஒழுக்கம் சீராக அமைவதற்குப் பல சாதனங்கள் உள. சைவசமயம் உலகியல் ஒழுக்கத்தை வேதநெறியாகப் பெற்றது. 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க' என்பதன் உண்மை உணரத்தக்கது. ஆலய அமைப்பு வேதாகம விதிகட்கு அமையவே ஞானிகளால் வகுக்கப்பெற்றது.

இவ்வுண்மைகளை மாதவச் சிவஞான சுவாமிகள் அவர் மாணுக்கர் வழிவந்தோர்கள் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள். இவற்றில் நம்பிக்கை மிக ஊறியவர்கள் குரு லிங்க சங்கம பத்தி உள்ளவர்கள்; ஆலய வழிபாட்டினுல் இம்மை மறுமைப் பயன்களை அடையும் உறுதியான உள்ளம் உடையவர்கள்.

சரியைத் தொண்டு சிவபூசை என்ற கிரியைகளுடன் அமைகின்ற சைவ ஒழுக்க சீலமே ஆலய வழிபாடு என்றல் பொருந்தும்.

சரீரத்தொண்டு கிரியை வழிபாடுகளைப் பிரதானமாகக் கொள்ளாத அறிவுத் தொழிலால் வழிபடும் பத்தர்கள் பலர் இந்நாளில் இருக்கிறார்கள். கோயில் குரு என்றதும் பயபத்தியுடன் நிற்கும் பழைய காலப் போக்கையே அனுட்டிப்பவர்களும் கிராமங்கள் தோறும் இருக்கிறார்கள். கிராம மக்கள் ஆலயவழிபாடு செய்யும் பாங்கு நீண்டகாலப் பழைய ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கொழும்பு யாழ்ப்பாண நகரங்களில் ஆலய சேவை வழிபாடு பழைய முறைகளினின்றும் வேறுபட்டு விட்டது.

கிராமங்களிற் பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்களே சைவசமயத்தைப் பாதுகாத்து வருகின்றன. சிறிய கோயில்கள் ஒன்றற்கொன்று சமீபமாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு கோயிலையும் பரிபாலிக்கும் அடியார்கள் பொருள் உதவுவோர் தங்கள் கோயில் என்று பாராட்டி அன்பு செலுத்துவர். அங்குள்ள மூர்த்தியைத் தங்கள் குலதெய்வம் என்று பத்தி செலுத்தி வாழ்விற் பல நன்மைகளை அடைந்து நிறைவுகாணும் மக்கள் அனுபவம் உண்மையான சைவானுபவமே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இந்தியாவில் சிற்பக்கலை சிறந்த கோயில்களை அரசர்கள் கட்டினார்கள். பொருளை மானியமாக விட்டார்கள், யாழ்ப்பாணத்திலுள்ள கோயில்கள் மிக வறிய சீவியம் நடாத்தும் கிராம மக்களின் பத்தியாகிய அத்திவாரத்தில் அமைந்துள்ளன.

சைவசமயம் யாழ்ப்பாணத்தில் நிலைத்திருப்பதன் காரணம், ஊர்கள் தோறும் உள்ள கோயில்களில் தவருது பூசைகள் திருவிழாக்கள் நடத்தி வழிபடும் மக்கள் திருநீறு பூசி நாங்கள் சைவசமயத்தவர்கள் என்ற அசைக்க முடியாத எண்ணம் நிரம்பி இருத்தலே என்று துணிந்து கூறி மகிழ்வோம். இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரும் ஒவ்வொரு சைவப் பெரியாரும் யாழ்ப்பாணத்தில் சைவம் வளருகிறது என்று கூறிவருதல்குறிப்பிடற்பாலது. நாவலர் வளர்த்த சைவம் வளர்க.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

# ஸ்ரீலஸ்ரீ, ஆறுமுகநாவலர் பெருமான் காட்டிய வாழ்க்கைநெறி (முற்றுடர்)

— புலவர் - த. குமாரசாமிப்பிள்ளை —

உலகத்தில் சைவர் என்றால் சுத்தமான உணவு, தூய வாழ்க்கையுடையவர் என்று யாவரும் நினைப்பதும் சொல்வதும். வழக்கம். சுத்தமான உணவு, மது, மாமிசம் தவிர்த்த உணவாம். தூயவாழ்வு, கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமா பாதங்களை நீக்கிய வாழ்வாம், மாபாதகம் ஐந்தினுள் நடுவில் உள்ள கள் என்பது சிங்கநோக்காய் முன், பின் உள்ளபாதகங்களைச் செய்யத் தூண்டிநிற்பது. மக்களின் நல்வாழ்வைக் கெடுத்து பிறரால் எள்ளி நகையாடச் செய்வது. ஆதலால் சைவராயுள்ளவர்கள் இவ்வைந்தையும் நீக்கிவாழும் கடப்பாடுடையர் என, நீதி நூல்கள் ஒழுக்க நூல்கள் கூறுவன. சமய தீட்சை பெற்று மேற்காட்டிய நெறியில் ஒழுகி மனம் தூயராயவழி மேல் விசேட தீட்சை, நிருவாண தீட்சைகளைப்பெற்று ஆசான் உபதேசித்தபடி சிவபூசை முதலானவும் பெற்று நியமமாகச் செய்து, கிரியை, யோகமென்னும் படிகளின் வழிநின்று ஐம்புல அடக்கம், சிவத்தியானம் முதலானவற்றைப் பயின்று வருவாராகில் ஞான உணர்வு தலைப்படும். அறிவில் திருவருள் விளக்கம் உண்டாம்.

"ஞானநூல்தனை
யோதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல்
தான் கேட்டல் நன்ரு
ஈனமிலாப் பொருளதனைச்
சிநதித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும்
எழில் ஞான பூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபம்
செபங்கள் தியானம்
ஒன்றுக் கொன்றுயரு மிவை
ஊட்டுவது போகம்
ஆனவையான் மேலான
ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடெய்த
அறிந்தோரெல்லாம்"

சித்தியார்

இவைகளையெல்லாம் கற்றும், நல்லாசானிடம் கேட்டு அறிந்தும் அவ்வழி ஒழுகிவருவது, முற்செய்த புண்ணிய வசத்தால் பெற்ற மனிதப்பிறவியின் பயனும் என்று தெளிந்த நாவலர் பெருமான் தாம் அந்நெறியில் ஒழுகினார். சிவவேடப் பொலிவும், சிவபூசையும், சிவத்தியானமும், திருவருள் விளக்கமும் உடையரானார் தீங்கு செய்யக்கருதி வந்தவரும் நேரிற் கண்டவுடன் விழுந்து வணங்கினார்கள். தாம் வாழ்ந்துகாட்டினார். எழுதிய நூல்களாலும், பிரசங்கத் தேன் மாரியாலும் உண்மையை உணரச் செய்தார். இவ்வாறு தமிழ் உலகில் மக்கள் நல்வாழ்வு வாழவழிகாட்டி வைத்தவர் நாவலர் பெருமான் என்பதை உளத்திற் கொண்டு அவ்வழியில் வாழ முயல்வது அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியும் நன்றியுமாம்.

# மாவை புனருத்தாரணம்

மாவைக்கந்த சுவாமி கோவில் பாலஸ்தாபனக் கிரியைகள் ஆவணி 12-13 (28-29-8-69)வியாழன் வெள்ளிக்கிழமையில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. ஆலய புனருத்தாரண வேலைகளுக்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. சுவாமி திருவருளால் எல்லாம் செவ்வனே நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செயல்படுகின்றன. ஆலய அமைப்புயாவும் வேத ஆகம முறைப்படியே அமையும் எந்த விதமாற்றமுமேற்படாது என அறியப்படுகின்றது.

புனரமைப்பில் வழிபாட்டு ஒழுங்குகளில் சில நவீன முறைகள் ஏற்படுமென சில தினசரிப்பத்திரிகைகளில் வந்துள்ள. செய்திகள் சைவ சமயக் கட்டுப் பாடுகளை அழிக்கும் முயற்சியிலீடுபடுகின்ற சில பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரமேயன்றி அவற்றில் சிறிதும் உண்மையில்லை.

பழமை கெடாமல் மாவை ஆலயம் சைவ மக்களுக்கு அருள் வழங்கும் நிலையமாகவும் வேத ஆகம சாத்திர வரம்பு கெடாமலும் பாதுகாத்துவருவது சைவமக்களுடைய கடமையாகும்.

அ. இ. சை. அ. பா. சபை.

*

சைவசமய குருபீடம்:

# சைவசமய சாத்திர ஆராய்ச்சி

— காரைநகர்த் தொண்டர் —

(2-8-69 தொடர்ச்சி)

கற்றோருக்கு வேண்டும் லட்சணம் செந்தமிழ்ப் புலமையும் நந்தலிலன்பும் உந்திய ஒழுக்கமும், சந்ததமியற்றும் அந்தமில்பூசையும் சிந்தையிலடியவர் சுந்தரத்தொண்டும்; பந்தமதகன்றும் பான்மையிற் செய்யும் பத்திசிரேட்டமும், வித்தக நூல்விநோதமும் சத்துறு கண்டனமும், உடையோரே பாரிற்சைவம் பரப்பும் மாண்புடையார், அப்படிப்பட்ட வித்வசிரோன்மணிகளே ஆராய்ச்சி நூலின்கண் உள்ள பூர்வபட்சிகள் கொள்கைககளையும்! சித்தாந்தியார் மறுப்புக்களையும் உற்று நோக்கும் திறமுடையார், அந்தமில் வேதமெல்லாம் அடிதலை தடுமாறிச் சிந்திட முனிவோருந் தேவரும் மருளுற்ற காலத்தில் ஈசன் விண்டுவைநோக்கி விண்டுவே? நீ ஒரு கலையுடன் புவியிற் போந்து அம்மறைகளை முறை நிறுவி வருகவென்றுஞ் சைசெய்ய அவர் வியாசராய்ப் போந்து வந்த சரிதம் எல்லாருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

ஐயிரு புராண நூலமலற் சோதியுஞ்-செய்யபன் மறைகளும் தெரிந்து மாயையால் மெய்யறு சூதவியாதர் புகல்வராயின் நான்மறையில் ஒரு பகுதியான விளக்கங்களையும் நல்லாசிரியரிடத்துக் கற்று அதன் உண்மைகளைப் பொருளறிந்து அதன் வழியைத் தூற்றுது போற்றி உய்தற்கு தவம் சிறிதும் செய்யாதவர்கள் இந்த நாத்தீர்களுக்கு ஒருவருக்குமில்லாத ஒரு சூக்கும அறிவு தலைப்பட்டிருத்தலை எப்பாலார் அறியினும் தப்பாமல் ஆற்றவும் ஆச்சரியப்படுவர். இவர்கள் மானிட வடிவமெடுத்து வந்துசைவ சமயிகளுடைய உறுதியான சிவபத்தி, வேதாகமபத்தி. வடமொழி பத்தி, பிராமண பத்தி, சைவசமய குரவர் பத்தி, சைவசமய சந்தான குரவர் பத்தி, சித்தாந்த சாத்திரபத்தி பன்னிரு திருமுறை பத்தி, முதலியவற்றைக் கெடுத்து நவீன சைவ சமயத்தில் வீழ்த்தி இருபத் தெட்டுக்கோடி நரகங்களிலும் விழுந்து வருந்தத் திருவுளம் கொண்டிருக்கலாம் அப்படிப்பட்டோரை நாம் குற்ற மேற்ற இடமில்லை —

(தொடரும்)

# தீண்டாமையும் விஞ்ஞான ஆராய்ச்சியும்

—முற்றொடர்

— தம்பிப்பிள்ளை சிவலிங்கம் —

சமய சாத்திரங்களின்படி தீண்டாமை நான்கு வகைப்படும். அவை பிரசவ ஆசௌசம், மரணஆசௌசம், பெண்களின் வீட்டுவிலக்கு ஆசௌசம், பிரதிலோமர் (சாதி) ஆசௌசம், பிரசவத் துடக்கு உள்ளவர் அதுஇல்லாதவருக்கு 2 அடிக்கப்பாலே நிற்கவேண்டும் எனவும், மரணத் துடக்குள்ளவர் 4 அடிக்கப்பாலும், வீட்டுவிலக்கிற்கு 8 அடிக்கப்பாலும், பிரதிலோமர் (பஞ்சமர்) 16 அடிக்கப்பாலும் நிற்கவேண்டுமெனவும் இவற்றுள் முதன்மூன்று துடக்குகளும் குறிக்கப்பட்ட கால எல்லைகளுடன் நீங்குமெனவும் நான்காவதாகிய பிரதிலோமரின் துடக்கு நித்திய துடக்கெனவும் சாத்திரங்கள்கூறுகின்றன. இவையாவும் இந்தியாவின் சில பாகங்களில் இப்பொழுதும் கவனிக்கப்பட்டுவருவதாக அறிகின்றோம்.

பல்வேறு சாதியினர்களின் இரத்தங்களை எடுத்து ஆராய்ச்சிசெய்த சிக்காக்கோ பல்கலைக்கழகத்திலுள்ள டக்ரர், ஏணெஸ்ட் எபிரகாம் என்பவர் எங்கள் சமயசாஸ்திரங்கள்கூறும் அனுலோமர் பிரதிலோமர் என்னும் இருசாதி மேற்பிரிவுகளையும் ஆராய்ச்சி மூலம் சரியென நிரூபித்துள்ளார். இவற்றின் விபரம் சாதியைப்பற்றியுள்ள கட்டுரையிற் தருவோம்.

ஏபிரகாம் அவர்கள் ஒருநாள் தமது ஆய்வுகூடத்தின் மேல்மாடியில் தமது கடமைகளை முடித்துவிட்டு ஓய்வுபெறக் கீழேவந்து ஓர் சாய்வு நாற்காலியிற் படுத்துக்கொண்டு தமக்கு முன்னேயுள்ள பூந்தோட்டத்தில் அழகான பூக்களிருப்பதைக்கண்டு பக்கத்திலுள்ள தாதிப்பெண்ணிடம் அப்பூக்களிலொன்றைப் பறித்துவரச்சொன்னார். அப்பெண் அப்பூவைக்கொண்டு வந்து கொடுக்கும்பொழுது அது வாடியிருப்பதைக் கவனித்தார். திரும்பவும் இன்னுமொரு பூவைக்கொண்டுவரும்படி கட்டளையிட்டார். அப்பூவும் அப்பெண்ணின் கைபட்டதும் வாடிஇருந்தது. இதைப்பற்றி அவர் சிந்திக்கும்பொழுது அப்பெண் ஏபிரகாம் அவர்கள் சிந்திப்பதன் காரணத்தை ஊகித்து அறிந்து தனக்கு மாதவிலக்கு வருங்காலங்களிற் பூக்களைத் தொட்டால் அது வாடுவது தனது அனுபவ உண்மையெனக் கூறினார். இதை அடிப்படையாகக் கொண்டு ஏபிரகாம் அவர்களும் அவரின் சீஷர்களும் ஆராய்ச்சிகள் நடத்தி எமது சமயசாஸ்திரங்களின் கூற்றின்படி சைவமக்கள் அனுட்டித்துவந்த மாதவிலக்கின் உண்மைக் கருத்தை எடுத்துக் காட்டினார். அவர் கண்ட உண்மை என்னவெனில்:- மாதவிலக்குவருங் காலங்களில் தேகத்தில் 'மெனேரொக்சின்' எனக் கூறப்படும் ஓர் நஞ்சு உற்பத்தியாகின்றதெனவும் அது நோயாளி, பெலசாலி என்ற பாகுபாடின்றி எல்லாப்பெண்களிடத்தும் உண்டாகின்றதென்றும் அந்தநஞ்சு பெண்களுக்குக் கிட்டச் செல்பவர்களின் இரத்தாசய நரம்புகளையும், செமிபாட்டிற்குரிய சில உறுப்புகளையும் வேறும் சில பிரதான நரம்புகளையும் தாக்கித் தேகாரோக்கியத்திற்குக் கெடுதியை விளைவிக்கிறதெனவும், பெண்களுக்கு வீட்டுவிலக்கு வருங்காலத்தில் தூரத்தில் அவர்களை வைத்துக் கொள்ளவேண்டுமெனவுந் தெரிவித்தார். நம்முன்னோர் இத்தீண்டாமைக் கட்டுப்பாட்டை, அணுவளவேனுந் தவறாது முறைப்படி கவனித்து வந்தார்கள். பெண்ணொருவர் மாதவிலக்கு வந்ததும் வீட்டில் ஓர் மறைவிடத்தில் ஓர் பாகத்தைக் கரிக்கோடு கீறி ஒதுக்கித் தம்மை மற்றவர்கள் பார்க்காதவண்ணம் திரை கட்டி அவ்விடத்திலிருந்து மூன்று அல்லது நான்கு நாட்களின்பின் அங்கசுத்தி செய்து மற்றும் அனுட்டானங்களையும் முடித்தபின்பே வீட்டிற்குட் செல்லும் வழக்கமிருந்து வந்தது. இப்போது இது அநாகரீகமெனக் கைவிடப்பட்டு ஆண்களும் பெண்களும் பலவித நோய்களுக்காளாகின்றார்கள் பிரசவத்தின் பின்னர் கெதியில் மாதவிலக்கு வந்தால் அப்பெண்கள் பிள்ளைகளுக்குப் பால்கொடுக்கப்படாது என்று கூறுவதற்கும், 'மெனரொக்சின்'என்னும் நஞ்சே காரணமெனக் கூறுகின்றனர்.

மேற்கூறப்பட்ட நான்குவித தீண்டாமைகளில் மூன்றாவதாயுள்ள தீண்டாமையை விஞ்ஞானிகள் சரியென நிரூபித்துள்ளனர். ஆகையால் மற்றவைகளைப்பற்றியும் எமது சமய சாஸ்திரங்கள் கூறுவன உண்மையெனவே ஏற்றுக் கொள்ளவேண்டும். நான்காவதாயுள்ள சாதித் தீண்டாமையைப்பற்றிப் பேராசிரியர் 'காளபியேசன்' என்பவர் 'இனநஞ்சு' (Racial poison) உள்ளதாகக் கண்டுபிடித்திருப்பதாக அறிகின்றோம். எமது சகோதரிகளுக்கோ தாய்மார்களுக்கோ தீண்டாமைக்காலம் வரும்பொழுது நாங்கள் அவர்களிடம் வெறுப்புக் காட்டுவதில்லை. அதுபோலவே சாதித் தீண்டாமையிலும் நாம் வெறுப்புக் காட்ட வேண்டியதில்லை. எல்லோருடனும் அன்பாகவே வாழவேண்டும். இவ்வாராய்ச்சி உண்மைகளை சுவாமி பாரதிகிருஷ்ணதீர்த்தர் அவர்களின் சனாதனதர்மம் என்னும் புஸ்தகத்தில் காணலாம்.

ஆகையால்பொருளாதார மாற்றத்தினால்தீண்டாமையை நீக்க முடியாது. எல்லோரும் ஒருவர் மீதொருவர் வெறுப்பின்றித்தத்தம்நிலையில் நின்றுஅன்புநெறியைக் கடைப்பிடித்து இன்பமாக வாழ்வதே நல்வாழ்வு. 'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.'

# நாவலர் வந்துவிட்டார் உயிர் கொடுப்போம்?

—முற்றொடர்

— மு. கந்தையா, ஏழாலை —

நாவலர் பெருமான் வாழ்ந்த காலச் சூழ்நிலை அவர்தம் வரலாற்றுக் கண்ணாடி மூலம் நமக்குப் புலனாகின்றது. அச்சூழ்நிலைக் கெதிரே நமது இன்றைய சூழ்நிலையை நோக்கும் போது அன்றையிலும் பார்க்கப் படுமோசமான நிலை இன்றிருப்பதை மறைக்க முடியாது. அன்றைய நம்மவர் அரசியல் அடிமைகளாயிருந்தார்களே தவிர — ஆங்கில ஆட்சியில் இருந்தார்கள் என்பது தவிர — தமது கலாசார நாகரீக அநுசரணைக்குஎவ்வித இடைஞ்சலும் பெற்றிருந்ததாகத் தோன்றவில்லை. ஆனால் இன்றோ நிலைமை வேறாகி விட்டது. இன்றைய நாம் எனிலோ ஒன்றோடொன்று போட்டியிட்டெழும் ஓராயிரஞ் சக்திகளுக்கு அடிமைப்பட்டுப் போய்க்கிடக்கின்றோம், இன்று நாம் பொருளாதார அடிமைகள் உத்தியோக அடிமைகள் பொதுவுடைமைக் கடிமைகள் சமத்துவத்துக் கடிமைகள், காந்தீயத்துக் கடிமைகள், பாரதீயத்துக் கடிமைகள், சிக்காக்கோ, யூ என் ஓ. பீக்கிங் மொஸ்கோ அங்கங் கிருந்து அலையலையாய் வரும் நவீனக் கருத்துக்கள் அத்தனைக்கும் அடிமைகள், அகில உலகின் அனைத்து மூலைகளிலும் அன்றாடம் முகிழ்க்கும் ஆசாபாசக் கருத்துக்கள் அத்தனைக்கும் அடிமைகள். இனறு நாடு சுதந்தரம் பெற்றுவிட்டது அதனால் நாம் சுதந்தரப் பிரசைகள் என்றற்குச் சொல்லளவல்லாற் பொருளில்லை. இத்தனை தளைகளுக்கும் உள்ளால் தலையை நிமிர்த்தி நமது கலாசாரம் நாகரீகம் என்பவற்றை எட்டிப் பார்க்க வேண்டிய இடைஞ்சலான நிலை இருக்கவே இருக்கின்றது. அன்றியும் அன்றைய நம்மவர் தமது கலாசார சமயாசாரப் பண்புகளை விளக்குஞ் சாதனங்கள்-கல்வி நிலையங்கள், நூல்வசதிகள், இன்மையால் ... உண்மையாகவே தூங்கினார்கள். இன்றைய நாம்எனிலோநமது கலாசார சமயாசாரப் பண்புகளை விளக்குஞ் சாதனங்கள் வேண்டிய அளவு இருந்தும் வேண்டுமென்றே தூங்கப் பழகி வருகின்றோம். 'உண்மையாய் உறங்குபவனைத் துயிலுணர்த்துதல்எளிது. வேண்டுமென்றே உறங்குபவனை விழிக்கச்செய்வது வில்லங்கத்தின் மேல் வில்லங்கம்' என்பது பழமொழி. இந்தக் கஷ்டமும் இருக்கவே இருக்கின்றது.

உண்மையாய் உறங்கிய அவர்களைத் துயிலுணர்த்த அந்த ஒரு நாவலர் உயிர்த்துடிப்பாய்த் துடித்தார் எனில், இன்றைய நம்மவரைத் துயிலுணர்த்த ஓராயிரம் நாவலர்கள் ஒருங்கெழவேண்டியிருக்கின்றது; உடலெலாம் வாயாய்க் கதறவேண்டியிருக்கிறது. உண்மைநிலை இங்ஙனமாகவும், உள்ளநோயை உற்றுணர்ந்து உரிய முறையில் பரிகரிப்பார் ஒருவருமே முன்வரக்காணோம். ஆனால் சோம்பல்தனத்தால் மருந்துண்ணாமற் கிடக்குஞ் சுரவாதசன்னிக்காரனுக்குச் சுடுதண்ணீர் கொடுத்து வியாதிமாற்றவந்த வைத்தியர்போலச் சிலர் பலர் முன்னிற்கின்றார்கள். அந்தச் சமத்துவப் புதுப்புரட்சிச் சகோதரத்துவக்கருத்துக்களைத் திரும்பத் திரும்பச் சொல்லி அவைதான் சைவஞானக்கருத்துக்களென்று காட்டி நம்மை ஏமாற்றித் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ள முன்னிற்கின்றார்கள். நாம் சொல்கிறபடி கேளாவிட்டால் சமயம் அழியப்போகின்றது என்கிறார்கள். சமூகம் பிளவுபடப் போகிறது என்கிறார்கள். அவ்வளவில் நில்லாது நம்தயவில் நிற்கும் தம்பிரான்களையும் தமக்கு ஒத்தூதவைக்கின்றார்கள். ஏதோ நெருப்பை மடியிற் கட்டிக் கொண்டவர்கள்போல நின்று துடிக்கின்றார்கள். 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா" என்றவாறு அவர்களுடைய இம்முயற்சியுஞ் சும்மாவன்று. வாக்குப்பலம் பெறும் நோக்கமே நோக்கம். இதற்கா நாம் ஏமாறுவது இவர்களுக்கான நல்ல பதில் நாவலர் பெருமான் வாக்கிலேயே இருக்கின்றது. 'நம்மை ஏமாற்ற முடியாது. நாம் விழிப்பாய்த்தான் இருக்கின்றோம்'. (தொடரும்)

பத்திராதிபர் ஸ்ரீ நா. கணேசலிங்கம் 'நாவலன் அகம்' இளவாலை, கந்தரோடையில் வசிக்கும் பிரமஸ்ரீ சி. கனகசபாபதி ஐயர் அவர்களால் சுன்னாகம் கலாதேவி அச்சகத்தில் [illegible]சிடப்பெற்று இளவாலை ஸ்ரீலங்கா சைவாதீனத்தின் சார்பில் அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு, த. சிவலி[illegible]. P. அவர்களால் வெளியிடப்பெற்றது.